# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, நவெம்பர் மாதம் 20 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 15.00*** ***தபாற் செலவு : ரூபா 7.50***

**2009 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டம்**

[*2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 8/2007*

**1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப் பொருட்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பின்வரும் ஐந்து உறுப்பினர்களைக்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பின்வரும் ஏழு உறுப்பினர்களைக்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(அ) (i) கைத்தொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச் சுச் செயலாளர் அல்லது அவரது பிரதி நிதி ;

(ii) சூழல் என்னும் விடயத்துக்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(iii) புவிச்சரிதவியல், சுரங்கத்தொழில், தொழில் முகாமை, நிதி மற்றும் சட்டம் என்னும் துறைகளில் செயல்முறை அனுபவத்தை வெளிப்படுத்தியுள்ளவர்களும் அறிவைக் கொண்டுள்ளவர்களும் என அமைச்சருக்குத் தோன்றுகின்றவர்களான மூன்று உறுப்பினர்கள்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***3.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில் "மூன்றாகவிருத்தல் வேண்டும்.". என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐந்தாகவிருத்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***4.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(1) அமைச்சரானவர், சபையின் கலந்தாலோசனையுடன், பட்டப்பின் பட்டமொன்றுடன் அல்லது பட்டயத்துடன் ஒரு புவிச்சரிதவியலாளராக அல்லது சுரங்கத்தொழில் பொறியியலாளராக ஆகக்குறைந்தது பன்னிரெண்டாண்டுகளைக்கொண்ட வெளிப்படுத்தப்பட்ட உயர்தொழில்சார் மற்றும் பிரயோக அனுபவத்தையுடைய ஆளொருவரைப் புவிச்சரிதவியல் அளவீட்டு, சுரங்கங்கள் பணியகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமித்தல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "(இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) புவிச்சரிதவியல் அளவீட்டு, சுரங்கங்கள் பணிப்பாளர், பணியகத்தின் பிரதான தொழினுட்ப அலுவலராகவிருத்தல் வேண்டுமென்பதுடன்" என்னும்

எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "(இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) புவிச்சரிதவியல் அளவீட்டு, சுரங்கங்கள் பணிப்பாளர் தலைமையதிபதி பணியகத்தின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும் மற்றும் பிரதான தொழினுட்ப அலுவலராகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "ஆறு ஆண்டுகள் காலப்பகுதிக்குப்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதிக்குப்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(1) சபையானது, இவ்வுட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவத்தைத் தவிர, இச்சட்டத்தினால் பணியகத்துக்கு அளிக்கப்பட்ட, அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் என்பவற்றுள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் பணியகத்தின் தவிசாளருக்கு, பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது ஊழியரொருவருக்கு அல்லது அரசாங்கத்துறையின் ஊழியரொருவராகவுள்ள வேறெவரேனும் ஆளுக்கு, பெயர்குறித்தோ அல்லது பதவி குறித்தோ கையளிக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "கனிப்பொருட்களுக்காக அகழ்ந்தெடுத்தலையும் தோண்டுதலையும் அத்துடன் அத்தகைய கனிப்பொருட்களைப் பதனிடுவதையும் வியாபாரம் செய்வதையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கனிப்பொருட்களுக்காக அகழ்ந்

தெடுத்தலையும் சுரங்கம் தோண்டுதலையும் அத்துடன் அத்தகைய கனிப்பொருட்களைப் பதனிடுவதையும், இடம்பெயர்த்தலையும், களஞ்சியப்படுத்துவதையும், வியாபாரம்செய்வதையும்," என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன்மூலமும் :-

"(உ) கனிப்பொருட்களை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திப்பொருட்களை மேம்படுத்துவதற்காகவும், பிரித்தெடுப்பதற்காகவும், அபிவிருத்தியினூடாகப் பெறுமதி சேர்ப்பதற்காகவும் மற்றும் வர்த்தக அடிப்படையின்மீது அத்தகைய கனிப்பொருட்களை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திப்பொருட்களை ஏற்றுமதி செய்வதற்காகவும் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள்பற்றி அமைச்சருக்கு மதியுரையளித்தல் ;

(ஊ) குறிப்பாக இப்பிரிவின் பந்திகள் (அ), (ஆ) மற்றும் (இ) என்பவற்றின்கீழ், இச்சட்டத்தின் கீழான பணிகளைப் பிரயோகிக்கும்போது பெறப்பட்ட தகவலையும் தரவுகளையும் தோதான ஊடகத்தில் பரப்புதல் ; அத்துடன்

(எ) பொறியியல் புவிச்சரிதவியல் பற்றிய கருத்திட்டங்களைப் பொறுப்பேற்றல் மற்றும் விளைவிக்கப்பட்ட புவிச்சரிதவியல்சார் அபாயங்களும் அனர்த்தங்களும் தொடர்பிலான மதியுரையையும் பரிகார வழிமுறைகளையும் வழங்குதல்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(ஈ) பின்வருவனவற்றிற்கான உரிமங்களை வழங்குவதற்கும் :-

(i) விண்ணப்பம் ஒன்றைப் பெற்றமையின் விளைவான அல்லது அக்கறை வெளிப்படுத்துதல்களை விளம்பரப் படுத்துவதன்மூலமும் கோருவதன் மூலமும் ஆன அகழ்ந்தெடுத்தல்கள் ;

(ii) சுரங்கம் தோண்டுதல் ;

(iii) இடம்பெயர்த்தல் ;

(iv) வியாபாரஞ்செய்தல் ;

(v) களஞ்சியப்படுத்துதல் ; அத்துடன்

(vi) கனிப்பொருட்களை ஏற்றுமதி செய்தல்;";

(2) அவ்வுப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் "செய்வதற்கு" என்னும் சொல்லுக்குப் பதிலாக "செய்வதற்கும் ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) (ஏ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(ஐ) புவிச்சரிதவியல் அல்லது கனிப்பொருட்கள் தொடர்பான ஏதேனும் கருத்திட்ட உத்தேசம் அதன்கண் மதிப்பீடுசெய்யப்பட்டுக் கொண்டிருக்கும், விடயத்துக்கேற்ப, ஏதேனும் அமைச்சின், திணைக்களத்தின் அல்லது நியதிச் சட்டமுறையான ஒழுங்கமைப்பின் ஏதேனும் தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுவினது உறுப்பினரொருவராகச் சேவையாற்றுவதற்கும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 20அ என்னும் புதிய பிரிவை உட்பகுத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவாகப் பயனுடைய தாதலும் வேண்டும் :-

*"வரிகள் தீர்வைகள் முதலிய வற்றைச் செலுத்து வதிலிருந்து பணியகத்துக்கு விலக்களித்தல்.*

20அ. அமைச்சரானவர், நிதி என்னும் விடயத் துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப் பாட்டுடன், 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நியதிகளின்படி அல்லது விடயத்துக்கேற்ப, அத்தகைய ஏதேனும் தீர்வையை, அறவீட்டை அல்லது வரியை விதிப்ப தனை ஆளுகின்றதும், அப்போதைக்கு வலுவிலுள் ளதுமான வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி அனுமதிக்கப்படுகின்றவாறான அத்தகைய அளவுக்கு ஏதேனும் தீர்வையை, அறவீட்டை மற்றும் பணியகத்தின் இலாபங்கள் அத்துடன் வருமானம் மீதான ஏதேனும் வரியைச் செலுத்துவதிலிருந்து பணியகத்துக்கு விலக்களித் தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு, "1971 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனச் சட்டத்தினதும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகவுள்ள ஏதேனும் கனிப்பொருளுக்கு ஏற்புடையனவாதலாகாது" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "1971 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனச் சட்டத் தினதும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகவுள்ள ஏதேனும் கனிப் பொருளுக்கு ஏற்புடையனவாதலாகாது :

ஆயின், எவ்வாறாயினும் இச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, பணியகமானது, இலங்கையின் ஆள்புலத்தினுள் நிறைவேற்றப்பட்ட, நீரகக் கரியகச் சேர்மப்பொருளையும் இரத்தினக்கற்களையும் தேடுதல் பற்றிய எல்லா ஆய்வுகளும் நுண்ணாய்வுகளும் தொடர்பான தரவு களையும் அறிக்கைகளையும் பெறுதல் வேண்டும்." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத் தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அகழ்ந்தெடுத்தலோ, சுரங்கம் தோண்டுதலோ, இடம்பெயர்த்தலோ, பதனிடுதலோ, வியாபாரம் செய்தலோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அகழ்ந்தெடுத்தலோ, சுரங்கம் தோண்டுதலோ, இடம்பெயர்த்தலோ, பதனிடுதலோ, களஞ்சியப்படுத்துதலோ, வியாபாரம் செய்தலோ" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "கைமாற்றலாம்." என்னும் சொல்லுக்குப் பதிலாக "கைமாற்றுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "அத்தகைய காணியின்மீது தோண்டுவதற்கு அல்லது அத்தகைய கனிப்பொருட்கள் எதனையும் அத்தகைய காணியிலிருந்து இடம்பெயர்வதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய சொந்தக்காரரின், குடியிருப்பாளரின் அல்லது உரிமம் வைத்திருப்பவரின் சொந்தப் பாவனைக்கெனக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு அத்தகைய கனிப்பொருள் பயன்படுத்தப்படின், அத்தகைய காணியின்மீது சுரங்கம் தோண்டுவதற்கு அல்லது அத்தகைய கனிப்பொருட்கள் எவற்றையும் அத்தகைய காணியிலிருந்து இடம்பெயர்ப்பதற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "எவையேனும் கனிப்பொருட்களை அகழ்ந்தெடுப்பதற்கு அல்லது சுரங்கம் தோண்டுவதற்கு, இடம்பெயர்ப்பதற்கு, பதனிடுவதற்கு, வியாபாரம் செய்

வதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அகழ்ந் தெடுப்பதற்கு, சுரங்கம் தோண்டுவதற்கு, இடம் பெயர்ப்பதற்கு, பதனிடுவதற்கு, களஞ்சியப்படுத்து வதற்கு, வியாபாரம் செய்வதற்கு, என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) பந்தி (அ)வின் (iv) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(v) பாராளுமன்ற உறுப்பினரொருவராக அல் லது மாகாணசபையொன்றின் உறுப்பின ரொருவராக அல்லது உள்ளூரதிகாரசபை யொன்றின் உறுப்பினரொருவராக உள்ள வரான,".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

***12***. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "குளமொன்றின், ஓடையொன்றின் அல்லது வாவியொன்றின் அல்லது அணைக்கட்டு ஒன்றின் அத்தகைய தூரத்துக்குள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வாவியொன்றின், ஆறொன்றின், அருவியொன்றின் அல்லது குளம் ஒன்றின் அத்தகைய தூரத்துக்குள்" என்னும் சொற் களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் பந்தி (ஏ)யை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(ஏ) கரையோரம் பேணல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அங்கீகார மில்லாமல், 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் சட்டத்தின் பொருளுக்குட்பட, கரையோர வலயத்தினுள் அடங்குகின்ற ஏதேனும் காணி ;

(ஜ) மகாவலி அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அங்கீகார மில்லாமல், 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்தப் பட்ட ஏதேனும் விசேட இடப்பரப்பினுள் அடங்குகின்ற ஏதேனும் காணி ;

(ஒ) காடுகள் என்னும் விடயத்துக்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரின் அங்கீகாரமில்லா மல், (451 ஆம் அத்தியாயமான) காட்டுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட ஏதேனும் ஒதுக்குக் காட்டினுள் அல்லது கிராமியக் காட்டினுள் அடங்குகின்ற ஏதேனும் காணி ;

(ஓ) நகர அபிவிருத்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அங்கீகார மில்லாமல், 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்தப் பட்ட நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றினுள் அடங்குகின்ற ஏதேனும் காணி ;

(ஔ) வனசீவராசிகள் பாதுகாப்பு என்னும் விடயத் துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அங்கீகாரமில்லாமல், (469 ஆம் அத்தியாய மான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட தேசிய ஒதுக்கினுள் அல்லது சரணாலயத்தினுள் அடங்குகின்ற ஏதேனும் காணி.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "ஏதேனும் காணி ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் காணி ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "ஏதேனும் காணி." என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் காணி;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் முடிவில் பின்வரும் பந்திகளைச் சேர்ப் பதன்மூலமும் :-

"(இ) (446 ஆம் அத்தியாயமான) தாவரவியற் பூங்காக் கட்டளைச்சட்டத்தின் பொருளுக்குட் பட, தாவரவியற் பூங்கா ஒன்றினுள் அல்லது அக்கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் இடப்பரப்பினுள் அமைந்துள்ள ஏதேனும் காணி ;

(ஈ) 1988 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, தேசிய மரபுரிமை கானக இடப்பரப்புகள் சட்டத் தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் தேசிய மரபுரிமை கானக இடப்பரப்பு ; அத்துடன்

(உ) (231 ஆம் அத்தியாயமான) சுடுகாடுகள், இடுகாடுகள் கட்டளைச்சட்டத்தின் பொருளுக் குட்பட்ட ஏதேனும் இடுகாடு அல்லது சுடுகாடு.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "உரிமம் எதுவும்" என்னும் சொற்களி லிருந்து "பதனிடுவதற்காக" என்னும் சொல்வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "உரிமம் எதுவும், கதிரியக்க

அம்சங்களைக் கொண்டுள்ள கனிப்பொருட்களையும், பவளத்தையும், வேறேதேனும் விதித்துரைக்கப்பட்ட கனிப்பொருளையும் அகழ்ந்தெடுப்பதற்காக, சுரங்கம் தோண்டுவதற்காக, இடம் பெயர்ப்பதற்காக, பதனிடுவதற்காக, களஞ்சியப்படுத்துவதற்காக," என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

**15**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -

(அ) (ஆ) என்னும் பந்தியில் "கனிப்பொருட்களை அகழ்ந்தெடுப்பதற்கு அல்லது சுரங்கம் தோண்டுவதற்கு, இடம்பெயர்ப்பதற்கு, பதனிடுவதற்கு, வியாபாரம் செய்வதற்கு அல்லது ஏற்றுமதி செய்வதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கனிப்பொருட்களை அகழ்ந்தெடுப்பதற்கு அல்லது சுரங்கம் தோண்டுவதற்கு, இடம்பெயர்ப்பதற்கு, பதனிடுவதற்கு, களஞ்சியப்படுத்துவதற்கு, வியாபாரம்செய்வதற்கு அல்லது ஏற்றுமதி செய்வதற்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அதன் (இ) என்னும் பந்தியில் "அகழ்ந்தெடுக்கின்றமைக்கு, சுரங்கம் தோண்டுகின்றமைக்கு, இடம்பெயர்க்கின்றமைக்கு, பதனிடுகின்றமைக்கு, வியாபாரம் செய்கின்றமைக்கு அல்லது ஏற்றுமதிசெய்கின்றமைக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அகழ்ந்தெடுக்கின்றமைக்கு, சுரங்கம் தோண்டுகின்றமைக்கு, இடம்பெயர்க்கின்றமைக்கு, பதனிடுகின்றமைக்கு, களஞ்சியப்படுத்துகின்றமைக்கு, வியாபாரம் செய்கின்றமைக்கு அல்லது ஏற்றுமதிசெய்கின்றமைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதோ'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(இ) அந்த உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன்மூலமும் :-

"ஆயின், எவ்வாறாயினும், கைத்தொழிற் சுரங்கம் தோண்டுதல் உரிமமொன்று அல்லது கனிப்பொருட்களை அகழ்ந்தெடுப்பதற்கான உரிமமொன்று, அத்தகைய உரிமத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய கைமாற்றப்படலாம் அல்லது பிணைப்பொறுப்பாக அளிக்கப்படலாம்.".

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் -

(அ) (அ) என்னும் பந்தியில் "அகழ்ந்தெடுக்கின்றதில், தோண்டுகின்றதில், பதனிடுதலில், வியாபாரம் செய்வதில் அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அகழ்ந்தெடுக்கின்றதில், சுரங்கம் தோண்டு கின்றதில், இடம்பெயர்ப்பதில், பதனிடுதலில், களஞ்சியப்படுத்துவதில், வியாபாரம் செய்வதில் அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அதன் (உ) என்னும் பந்தியில் "ஆறுமாதங்களை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மூன்று மாதங் களை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "ஆறுமாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன் றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத் தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**17**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு, "அவரது சொந்தப் பாவனைக்கென" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வர்த்தக நோக்க மொன்றாகவிராத அவரது சொந்தப் பாவனைக் கென" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் **44** ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(ஈ) எந்தக் காணி, சுரங்கம் அல்லது வேறு வளவுகள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ, அத்தகைய உரிமத்தின் நியதிநிபந்தனைகள் அல்லது இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாடு இணங்கியொழுகப்படுகின்றனவாவென்பதை நிச்சயிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறாக அந்தக் காணியினுள், சுரங்கத்தினுள் அல்லது வேறு வளவுகளினுட் பிரவேசித்துச் சோதனையிடுவதற்கும் மற்றும் -

(i) அதன்மீது அத்தகைய நுண்ணாய்வுகளை அல்லது ஆய்வுகளை நிறைவேற்றுவதற்கும் ; அத்துடன்

(ii) அதன்மீது காணப்படும் ஏதேனும் பொறித்தொகுதி, சாதனம், எந்திரத்தொகுதி, கணக்குப் புத்தகங்கள், வரைபடங்கள் அல்லது வேறு ஆவணங்கள் என்பவற்றின் அத்தகைய சோதனைகளையும் பரிசோதனைகளையும் செய்வதற்குமான,

தத்துவம்;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் **46** ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன்மூலமும்:-

"புவிச்சரிதவியல்
மற்றும் கனிப்பொருள்
நுண்ணாய்வுகளை
நிறைவேற்றுவதற்கு
அலுவலர்கள்
முதலியவர்களுக்குள்ள
தத்துவம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 46அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 46அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :-

*"உட்பிரவேசித்தல், தேடுகையிடுதல், சோதனையிடுதல் முதலிய வற்றுக்கு அதிகார மளிக்கப்பட்ட அலுவலர் களுக்குள்ள தத்துவங்கள்.*

46அ. பணியகமானது, பணியகத்தின் பணிகளை ஆற்றும் நோக்கத்துக்கு அவசியமென அது கருதுகின்றவிடத்து, (இதனகத்துப்பின்னர் "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணியகத்தின் எவரேனும் அலுவலருக்கு -

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ் ஏதேனும் கனிப்பொருளின் சுரங்கம் தோண்டுதல், அகழ்ந்தெடுத்தல், பதனிடுதல், களஞ்சியப்படுத்துதல், வியாபாரம் செய்தல் அல்லது ஏற்றுமதி கொண்டு நடாத்தப்படுகின்ற ஏதேனும் அமைவிடத்தினுள் அல்லது இடத்தினுட் பிரவேசிப்பதற்கும் அதனைத் தேடுகையிடுவதற்கும் மற்றும் சோதனையிடுவதற்கும் ;

(ஆ) இச்சட்டத்தின்கீழான உரிமமொன்றின் அதிகாரமின்றி ஏதேனும் கனிப்பொருளின் சுரங்கம் தோண்டுதல், அகழ்ந்தெடுத்தல், பதனிடுதல், களஞ்சியப்படுத்துதல், வியாபாரம் செய்தல் அல்லது ஏற்றுமதி கொண்டுநடாத்தப்படுகின்றதென நம்புவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்குக் காரணமுள்ள ஏதேனும் அமைவிடத்தினுள், வளவுகளினுள் அல்லது இடத்தினுட் பிரவேசிப்பதற்கும், அதனைத் தேடுகையிடுவதற்கும் மற்றும் சோதனையிடுவதற்கும் ;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு முரணாக, எவையேனும் கனிப்பொருட்கள், விடயத்துக்கேற்ப, இடம்பெயர்க்கப்படுகின்றன அல்லது ஏற்றுமதிசெய்யப்படுகின்றனவென நம்புவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்குக் காரணமுள்ள ஏதேனும் வாகனத்தை அல்லது கலத்தை நிறுத்துவதற்கும், அதனுட் பிரவேசிப்பதற்கும் மற்றும் அதனைச் சோதனையிடுவதற்கும்,

எழுத்தில் அதிகாரமளிக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு, அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(3) கனிப்பொருட்களை அகழ்ந்தெடுப்பதற்கான உரிமமொன்றை வைத்திருப்பவர், அத்தகைய உரிமம் எந்த இடப்பரப்புத் தொடர்பில் வழங்கப்பட்டுள்ளதோ அந்த இடப்பரப்பில் வர்த்தக அடிப்படையில் கனிப்பொருளொன்று அபிவிருத்தி செய்யப்பட்டு சுரங்கம் தோண்டப்படலாமெனத் தீர்மானிக்குமிடத்து, கனிப்பொருட்களை அகழ்ந்தெடுப்பதற்கு அவருக்கு வழங்கப்பட்ட உரிமத்துடன் இணைந்துள்ள நிபந்தனைகளுக்கு அவர் இணங்கியொழுகி இருப்பதுடன், கனிப்பொருட்களைச் சுரங்கம் தோண்டுவதற்கான உரிமமொன்றைப் பெறுவதிலிருந்து இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டின்கீழ் அவர் வேறுவகையில் தகைமையற்றவராக விராதிருப்பின், அத்தகைய இடப்பரப்புத் தொடர்பில் சுரங்கம் தோண்டும் கைத்தொழில் உரிமமொன்றுக்கு மற்றும் கைவினைஞர்சார் சுரங்கம் தோண்டுவதற்கான உரிமமொன்றுக்கு விண்ணப்பித்து அதனைப் பெறுவதற்கான புறநீங்கலான உரிமையை அவர் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) செயலாளரானவர், கனிப்பொருட்களை அகழ்ந் தெடுப்பதற்கான உரிமமொன்றை வைத்திருப்பவரினால் செய்யப்படும் வேண்டுகோளின்மீதும் அமைச்சரின் முன் னங்கீகாரத்துடனும், அத்தகைய வைத்திருப்பவருடன் முதலீட்டு உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ளுதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு முதலீட்டு உடன்படிக் கையும் விதித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்த கைய படிவத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், விதித் துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந் தனைகளைக் கொண்டிருத்தலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவு "அத்தகைய உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்புக்குள் உரிமம் பெற்றவர் எல்லாக் கனிப்பொருட்களுக்குமாக சுரங்கம் தோண்டு வதற்கும் அத்துடன் அத்தகைய கனிப்பொருட்களில் வியாபாரம் செய்வதற்கும் அவற்றை ஏற்றுமதிசெய்வதற்கும்" என்னும் சொற் களுக்குப் பதிலாக "அத்தகைய உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட கனிப்பொருட்களை மட்டுமே சுரங்கம் தோண்டுவதற்கும் அத்துடன் உற்பத்தி அபிவிருத்தியின் பின்னர் இயன்றவிடத் திலெல்லாம் அத்தகைய கனிப்பொருட்களில் வியாபாரம் செய்வதற்கும் அவற்றை ஏற்றுமதிசெய்வதற்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவு "ஆயின்," என்னும் சொல்லிலிருந்து "பிரயோகித்தல் ஆகாது." என்னும் சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "ஆயின், அத்தகைய ஏதேனும் காணி இடப்பரப்பின் சொந்தக் காரர் அல்லது அரச ஒழுங்கமைப்பு அத்தகைய காணி இடப் பரப்பை உடைமை கொண்டுள்ளவிடத்து, உரிமம்வைத்திருப்ப வர், அத்தகைய சொந்தக்காரரின் அல்லது அரச ஒழுங்கமைப் பின் சம்மதத்துடனன்றி, இப்பிரிவில் அவருக்களிக்கப்பட்ட உரிமைகளைப் பிரயோகித்தலாகாது." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் III ஆம் பாகத்துக்கான தலையங்கத்தைத் திருத்துதல்.*

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் III என்பதற்கான தலையங்கம் "சுரங்கங்களில் உள்ள வேலையாட்களின் சுகா தாரமும் பாதுகாப்பும் நலவுரிமையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கனிப்பொருட்களுக்காகச் சுரங்கம் தோண்டுகின்ற வேலையாட்களின் சுகாதாரமும் பாதுகாப்பும் நலவுரிமையும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படு கின்றது.

**26**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீளஇலக்கமிடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) மீளஇலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(2) ஓராம் உட்பிரிவிலுள்ளதெதுவும் -

(அ) முகாமைத்துவப் பதவியில் ஈடுபட்டுள்ள எவரேனும் பெண்ணுக்கு ;

(ஆ) சுகாதார அல்லது நலன்புரிச் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள எவரேனும் பெண்ணுக்கு ; அல்லது

(இ) ஏதேனும் கற்கைநெறியின் பாகமாக நிலத்துக்குக்கீழ் சுரங்கம் தோண்டுதற் செயற்பாடுகளுடன் பரிச்சயமாகவிருப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எவரேனும் பெண்ணுக்கு,

ஏற்புடையதாதலாகாது.".

**27**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(4) அத்தகைய நோக்கங்களுக்கான ஆட்சேர்ப்பு, அப்போதைக்கு வலுவிலுள்ள தொழிற்சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கியதாகவிருத்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**28**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு, அப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "கட்டளையிடப்படுதலோ அல்லது கட்டாயப்படுத்தப்படுதலோ ஆகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக "விபத்தொன்றின் விடயத்திற்றவிர, கட்டளை யிடப்படுதலோ அல்லது கட்டாயப்படுத்தப்படுதலோ ஆகாது." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத் தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**29**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "ஓராம் உட்பிரிவினால்" என்னும் சொற் களுக்குப் பதிலாக "(2) ஆம் உட்பிரிவினால்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத் தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**30**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தி யில் "சுரங்கம் வெட்டி எடுக்கின்ற, பதப்படுத்துகின்ற, கொண்டுசெல்லுகின்ற, வியாபாரம்செய்கின்ற அல்லது ஏற்றுமதிசெய்கின்ற;" என்னும் சொற் களுக்குப் பதிலாக "அல்லது சுரங்கம் தோண்டுகின்ற, பதனிடுகின்ற, களஞ்சியப்படுத்துகின்ற, இடம்பெயர்க் கின்ற, வியாபாரம் செய்கின்ற அல்லது ஏற்றுமதி செய்கின்ற;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஒரு நீதவான் முன்னிலையிலான சுருக்கமுறையான விசாரணை யின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கும்" என்னும் சொற்களிலிருந்து, "ஓர் ஆண்டை விஞ்சாத ஒரு காலத்துக்கான" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "ஒரு நீதிவான் முன்னிலையிலான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாததும்

ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பண மொன்றுக்கும், இரண்டாவது அல்லது அடுத்துப் பின்னரான தவறொன்றின் விடயத்தில், ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறை யாததும் இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாதது மான குற்றப்பணமொன்றுக்கும் அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத் துக்கான மறியற்றண்டனைக்கும்" என்னும் சொற் களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(1அ) இச்சட்டத்தின்கீழ் அதற்கென வழங்கப்பட்ட உரிமமொன்றின்றி ஏதேனும் காணியின்மீது கனிப்பொருட்களை அகழ்ந்தெடுக்கின்றமைக்கான அல்லது சுரங்கம் தோண்டுகின்றமைக்கான இச் சட்டத்தின்கீழான தவறொன்றுக்காக நீதிவானொரு வர் எவரேனுமாளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்குமிடத்து அவர், அத்தகைய ஆளின்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் குற்றப்பணத்துடன் அல்லது மறியற் றண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக, அத்தகைய அகழ்ந்தெடுத்தல் அல்லது சுரங்கம் தோண்டுதல் தொடங்குவதற்கு முன்னர் அத்தகைய காணி எந்த நிலைமையில் இருந்ததோ அந்த நிலைமைக்கு அதனை மீட்டளிக்கும்படி அல்லது மறுசீரமைக்கும்படி அத்தகைய ஆளுக்குக் கட்டளையிடலாம்.

(1ஆ) உட்பிரிவு (1அ) இன்கீழ் எந்தக் காணி தொடர்பில் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்தக் காணியாகவுள்ளதும், அதன்கண் விவரிக் கப்பட்டதுமான காணி, அகழ்ந்தெடுத்தல் அல்லது சுரங்கம் தோண்டுதல் தொழிற்பாடு அதன்மீது தொடங்கப்படுவதற்கு முன்னிருந்த நிலைமைக்கு மீட்டளிக்கப்பட்டுள்ளதென்ற பொருள்பட, பணிப் பாளர் தலைமையபதிபதியின் கைப்பட்ட சான்றித ழொன்று, சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டு மென்பதுடன், அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளின் முதற்தோற்றளவிலான சான்றாகவிருத்தலும் வேண்டும்.";

(4) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "ஒரு நீதிவான் முன்னிலையிலான சுருக்கமுறை விசாரணையின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல்", என்னும் சொற்களிலிருந்து, "ஆறு மாதங்களை விஞ்சாத ஒரு காலத்திற்கு" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "ஒரு நீதிவான் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் எழுபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் அல்லது பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாததுமான ஒரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(5) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 63அ, 63ஆ, 63இ மற்றும் 63ஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன வென்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 63அ, 63ஆ, 63இ மற்றும் 63ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுடையனவாதலும் வேண்டும் :-

*"கைப்பற்றுவதற்கான தத்துவங்கள்.*

63அ. (1) இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப்பட்டுள்ளதென நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ள பொலிசு அலுவலரொருவர், பிடியாணையுடனோ அல்லது பிடியாணையின்றியோ அத்தவறு புரியப்படுவதில் அல்லது அது சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்ட, சுரங்கம் தோண்டப்பட்டுள்ள கனிப்பொருளின் ஏதேனும் சுரங்கம் தோண்டப்பட்ட கனிப்பொருள் அளவை அல்லது ஏதேனும் எந்திரத்தொகுதியை, சாதனத்தை அல்லது பொருளைக் கைப்பற்றலாம்.

(2) இப்பிரிவினால் பொலிசு அலுவலரொருவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி ஏதேனும் கனிப்பொருள், எந்திரத்தொகுதி, சாதனம் அல்லது பொருள் அவரினால் கைப்பற்றப்படுமிடத்து, அவர் அத்தகைய கனிப்பொருளை, எந்திரத்தொகுதியை, சாதனத்தை அல்லது பொருளை நீதிவானொருவர் முன்னிலையில் உடனடியாகக் காண்பித்தல் வேண்டும் அல்லது அவரினால் சோதனையிடப்படுவதற்கு அதனைக் கிடைக்கக் கூடியதாக்குதல் வேண்டும் ; அத்தகைய கனிப்பொருள், எந்திரத் தொகுதி, சாதனம் அல்லது பொருள்தொடர்பில் தொடுக்கப்பட்ட குற்றவழக்கொன்று முடிவுறும் வரை, அத்தகைய கனிப்பொருளை, எந்திரத் தொகுதியை, சாதனத்தை அல்லது பொருளைத் தடுத்துவைத்தல் அல்லது அதன் கட்டுக்காப்பு தொடர்பாகத் தகுதியானதென அவர் எண்ணுகின்றவாறான அத்தகைய கட்டளையை நீதிவான் ஆக்குதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஏதேனும் கனிப்பொருள், எந்திரத் தொகுதி, சாதனம் அல்லது பொருள், விரைவில் அழுகிப்போகும் தன்மையினதாகவிருக்குமிடத்து, அத்தகைய கனிப்பொருள், எந்திரத்தொகுதி, சாதனம் அல்லது பொருள் விற்பனை செய்யப்பட்டு அத்தகைய விற்பனையினாலான வரும்படிகள் நீதிமன்றத்தில் வைப்பிலிடப்படுதல் வேண்டுமென நீதிவான் கட்டளையிடலாம்.".

இழப்பித்தல்.

63ஆ. (1) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கு எவரேனுமாள் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அத்தவறு புரியப்படுவதில் அல்லது அது சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் கனிப்பொருள், எந்திரத்தொகுதி, சாதனம் அல்லது பொருள் அல்லது 63அ என்னும் பிரிவிற்கான காப்புவாசகத்தின்கீழ் நீதிமன்றத்தில் வைப்பிலிடப்பட்ட அத்தகைய ஏதேனும் கனிப்பொருளின் அல்லது பொருளின் விற்பனையினாலான வரும்படிகள் அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமென நீதிவான் கட்டளையாக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்றின்மூலம் இழப்பிக்கப்பட்ட ஏதேனும் கனிப்பொருள், எந்திரத்தொகுதி, சாதனம் அல்லது பொருள், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதன்மேல் அரசுக்கு முழுமையாக உரித்தாதல் வேண்டும்.

(3) அத்தகைய உரித்தாக்குதலானது,-

(அ) இழப்பித்தற் கட்டளைக்கெதிராக, மேன்முறையீடு செய்யப்படாதிருப்பின், அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமொன்றுக்கு அல்லது உயர்நீதிமன்றத்துக்கு எக்காலப் பகுதியினுள் மேன்முறையீடொன்று செய்யப்படலாமோ அக்காலப்பகுதி முடிவுற்றதன் பின்னர் ; அல்லது

(ஆ) இழப்பித்தற் கட்டளைக்கெதிராக அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றத்துக்கு அல்லது உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, ஒன்றில் அத்தகைய இழப்பித்தற் கட்டளையை உறுதிப்படுத்தி அல்லது மேன்முறையீட்டைத் தள்ளுபடி செய்து மேன்முறையீடு தீர்மானிக்கப்பட்டதன்மேல்,

பயனுடையதாதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அரசுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள ஏதேனும் கனிப்பொருள், எந்திரத்தொகுதி, சாதனம் அல்லது பொருள் விற்பனை செய்யப்படுவதனையும் அத்தகைய விற்பனையிலான வரும்படிகள் நீதிமன்றத்தில் வைப்பிடப்படுவதனையும் நீதிமன்றம் செய்வித்தல் வேண்டும்.

*தவறுகள், பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறுகளாக விருத்தல்.*

63இ. இச்சட்டத்தின்கீழான தவறொவ்வொன்றும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அச்சட்டத்தின் பொருளுக்குட்பட பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

*பணியகத்தின் அலுவலர்கள் சமாதான அலுவலர்களாக விருத்தல்.*

63ஈ. பணியகத்தின் அலுவலர் ஒவ்வொருவரும், அச்சட்டத்தினால் சமாதான அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களுள் எவற்றையும் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் பொருளுக்குட்பட சமாதான அலுவலரொருவராகவிருத்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(1) இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன்கொடுப்பதற்கு, விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அவைதொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும், குறிப்பாகப் பின்வரும் கருமங்களுள் எல்லாம் தொடர்பிலும் அல்லது எவைதொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :-

(அ) சுரங்கங்களிலும் அதன் சுற்றாடலிலும் உள்ள வேலையாட்களின் சுகாதாரமும் பாதுகாப்பும் ;

(ஆ) சுரங்கங்களில் உடனல நிலைமைகள் ;

(இ) சுரங்கங்களில் வழங்கப்படவேண்டிய மருத்துவ வசதிகள் ;

(ஈ) சுரங்கங்களில் கழிவுப்பொருள், குப்பை கூளம் மற்றும் நச்சுத் தன்மையினவான பதார்த்தங்கள் என்பவற்றை முகாமை செய்தல் ;

(உ) சுரங்க முகாமையாளர்களை நியமித்தல் ;

(ஊ) சுரங்கங்களில் வேலையாட்களின் சுகாதாரத்தையும் பாதுகாப்பையும் மேற்பார்வைசெய்வதற்குக் குழுக்களை நியமித்தல் ;

(எ) சுரங்கங்களில் ஏற்படும் விபத்துக்களையும் மரணங் களையும் அறிவித்தல் ;

(ஏ) சுரங்கங்களில் சுரங்கம் தோண்டுதல் தொடர்பாகப் பதிவேடுகளையும் கணக்குகளையும் பேணுதல் ;

(ஐ) சுரங்கங்களில் வெடிப்பொருட்களைக் கையாளுத லும் பயன்படுத்துதலும் ;

(ஒ) சுரங்கங்களில் பொறித்தொகுதி அல்லது எந்திரத் தொகுதி பயன்படுத்தப்படுவதனை ஒழுங்கு படுத்துதல் ;

(ஓ) கனிப்பொருட்களைக் களஞ்சியப்படுத்துதல் ;

(ஔ) அரசுரிமைப்பணங்களைக் கோருதலும் சேகரித் தலும் ;

(க) சுரங்கச் சூழல் மற்றும் மீட்டளித்தல் வரைபடங் களைத் தயாரித்தலும், சமர்ப்பித்தலும் மற்றும் இணங்கியொழுகுவதற்கான முறையும்.".

**33.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவு, "கற்சுரங் கங்கள், சுரங்கங்கள் அத்துடன் கனிப்பொருட்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சுரங்கங்கள், கற்சுரங்கங்கள் அத்துடன் கனிப்பொருட்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**34.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவு, "உள்ளூரதி காரசபை" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்து வதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"சுரங்கம்" என்பது, கனிப்பொருட்களை அகழ்ந்தெடுக்கும் அல்லது சுரங்கம் தோண்டும் மற்றும் பதனிடும் நோக்கத்துக்காக, நிலத்தின் மீதான ஒரு துவாரமிடுதல் அல்லது அதில் அகழ்தல் அல்லது அதனைத் தொழிற் படுத்தல், என்று பொருள்படுவதுடன் அத்தகைய அகழ்ந்தெடுத்தல் சுரங்கம் தோண்டுதல் அல்லது பதனிடுதல் செயற்பாடுகள் சம்பந்தமாகப் பயன் படுத்தப்பட்ட நிலத்துக்கு கீழான அல்லது மேலான எல்லாக் கட்டு வேலைகளையும், எந்திரத்தொகுதியை யும், பொறித்தொகுதியையும், கட்டிடங்களையும், வளவுகளையும் உள்ளடக்கும்;".

**35.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்